**ஆசிரியர்: ஏ.கஜன்** B.A-Tam (Cont..)
TP: 077 2400 707

**தமிழ்வழி பரீட்சைகள்**

# அலகு ரீதியான பரீட்சைத் தொடர்

**தரம் 07**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**
**Tamil Language and Literature I, II**

அந்தரே கதைகள்
ஆறு (கவிதை)
கடமை (கட்டுரை)

**ஒன்று முப்பது மணி**
**One thirty hour**

A/L ACCOUNTING WORLD
2 ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
Geography
இனிது கல்வி நிலையம்
பாலிநகர், வவுனிக்குளம்
Personal & Group Class
6-11 - TAMIL A/L - GEOGRAPHY

தமிழ்வழி
கற்றலுக்கான ஒளி

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

பரீட்சைத் தொடர்
Examination Series **1**

**கவனிக்க:**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்குரிய **புள்ளிகள்** 100 ஆகும்.
* 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
* அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பகுதி II இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

.................................................................

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "தன் மகன் பரோபகார சிந்தையோடு செய்த செயலை தாய் மெச்சினாள்" – இங்கு **சிந்தை** என்பதன் **ஒத்த சொல்**
   1. எண்ணம் 2. சூழ்ச்சி 3. வஞ்சனை 4. ஆற்றல்

2. "ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்" – இங்கு **மேடு** என்பதன் **எதிர்ச்சொல்**
   1. ஏற்றம் 2. பள்ளம் 3. உயர்வு 4. சமவெளி

3. "ஆழி இறைவனைக் காண வந்தேன்" – இங்கு **ஆழி** என்பதன் ஒத்த பொருள் **அல்லாதது**
   1. கடல் 2. நீரூற்று 3. சாகரம் 4. மோதிரம்

4. "மகனின் சாமர்த்தியத்தை தந்தை பாராட்டினார்" – இங்கு **சாமர்த்தியம்** என்பது
   1. கெட்டித்தனம் 2. கோளைத்தனம் 3. வஞ்சகத்தன்மை 4. நகைச்சுவை

5. "இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்" – இங்கு **தவழ்ந்து தவழ்ந்து** என்பது
   1. இணைமொழி 2. அடுக்கிடுக்குத் தொடர் 3. இரட்டை மொழி 4. அடுக்குத் தொடர்

6. "கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்" – இங்கு **கண்ணறை** என்பது
   1. சோலை 2. பள்ளத்தாக்கு 3. சிறு அறை 4. சமவெளி

7. "மகனின் கேலியை தந்தை புரிந்து கொண்டார்" – இங்கு **கேலி** என்பது
   1. கேலிச் சித்திரம் 2. நகைப்பு 3. நகைச்சுவை 4. நாடகம்

8. "இது பற்றி எனக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை" – இங்கு **ஆட்சேபனை** என்பது
   1. உடன்பாடு 2. மறுப்பு 3. விண்ணப்பம் 4. முறைப்பாடு

9. **குந்தகம்** என்பது
   1. ஏற்பாடு 2. தடை 3. அணைக்கட்டு 4. சோலை

10. அருகில் காட்டப்பட்டுள்ள **நிறுத்தற்குறியீடு** ;
    1. அரைப்புள்ளி 2. முற்றுப்புள்ளி 3. முக்காற்புள்ளி 4. மெய்ப்பாட்டுக்குறி

**11.** **அந்தரே கதை**களைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தவர்
1. திருலோகசீதாராம் 2. புலவர். பெரியதம்பிப்பிள்ளை 3. H.M.P.மொஹிதீன் 4.பாரதிதாசன்

**12.** **கிரி, கிறி** என்பவற்றின் பொருள்கள் **முறையே**
1. மலை, பொய் 2. பயம், மலை 3. பொய், மலை 4. கடல், தர்மம்

**13.** **ஆறு** எனும் கவிதையைப் பாடியவர்
1. திருலோகசீதாராம் 2. தேசிய விநாயகம்பிள்ளை 3. H.M.P.மொஹிதீன் 4.பாரதியார்

**14.** **குளவி, குழவி** என்பவற்றின் பொருள்கள் **முறையே**
1. வண்டு, குழந்தை 2. குழந்தை, வண்டு
3. துன்பம், வண்டு 4. உறவாடி, குழந்தை

**15.** **தம்பி புத்தகம் வாசித்தான்** – இவ் வாக்கியத்தின் **செயப்படுபொருள்**
1. தம்பி 2. வாசித்தான் 3. விடை இல்லை 4. புத்தகம்

**16.** வாக்கியமொன்றில் கருத்துத் தோன்றுமிடம் அழைக்கப்படுவது.
1. பயனிலை 2. எழுவாய் 3. செயப்படுபொருள் 4. அடைமொழி

**17.** **கடமை** என்ற கட்டுரை இடம்பெறும் **நூல்**
1. இலக்கியப் படகு 2. குழந்தைச் செல்வம் 3. மலரும் மாலையும் 4. அந்தரே கதைகள்

**18.** "எனது அக்கா அழகிய றோஜாவைத் தலையில் சூடினாள்" – இங்கு இடம்பெறும் **அடைமொழி**
1. எனது 2. அழகிய 3. றோஜா 4. சூடினாள்

**19.** பின்வருவனவற்றுள் வினையடையாக **அமைவது**
1. விரைவாகச் செய் 2. இனிய பாடல் 3. சின்னக் குழந்தை 4. கரிய யானை

**20.** **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**
(அ) தனக்குத் தானே செய்கின்ற கடமைளால் மனிதன் சுகம் பெறுகின்றான்.
(ஆ) அதுபோல் சுயநலம் என்பதும் ஒரு கடமைதான் என்று கொள்வதில் தவறில்லை.
(இ) பிறர்பால் ஒழுங்காகக் கடமைகளைச் செய்கின்றவன் புகழும் மதிப்பும் பெறுவது கூட, தன் சுகம் பெறும் பொருட்டாகத்தான்.
(ஈ) எனவே கடமையின் அடிப்படையிலும் சுயநலம் தான் அடங்கியிருக்கின்றது.
(1) அ, இ, ஈ, ஆ (2) ஈ, அ, ஆ, இ
(3) இ, ஈ, ஆ, அ (4) இ, ஆ, ஈ, அ

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1) ஆறு தனது பயணத்தில் சென்று வந்த இடங்கள் **நான்கு** தருக.

2) **நான்கு வகைக்** கடமைகளும் யாவை?

3) நாம் முழு உரிமையாய்ப் பெற்றுக்கொண்ட செல்வங்கள் யாவை?

4) **அடைமொழி** என்றால் என்ன?

5) அந்தரேயின் சுட்டித்தனங்கள் **நான்கு** தருக.

6) நாம் யார் யாருக்குக் கடமைப்பட்டுள்ளோம்?

7) அந்தரேயின் தாயின் குணப்பண்புகள் **இரண்டு** தருக.

8) **பார்த்தெழுதுதல்** என்றால் என்ன?

9) உமக்குத் தெரிந்த நான்கு நிறுத்தற் குறியீடுகளை அவற்றுக்குரிய குறிகளுடன் எழுதுக.

10) "இன்னும் நீண்ட வழி போக வேண்டுமம்மா" என்பதன் கருத்து யாது?

**(4+4+3+2+4+3+2+2+4+2=30 புள்ளிகள்)**

**02. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன என்பதை எழுதுக.**

1) "நல்லதம்மா, அப்படியே இருக்கிறேன்"

2) "அப்படியானால் பொல்லாத்தனம் செய்கிற மாட்டைக் கட்டிப்போட வேண்டியதுதான்"

3) "பசியோடிருந்த ஒரு பிள்ளைக்குப் பயன்படச் செய்தேன்"

4) "சரி, நம் வீட்டில் இப்போது மூன்று பேர் இருக்கின்றோம்"

5) "அப்பா, உங்களுக்குக் கணக்குத் தெரியுமா?"

**(5 X 2 = 10 புள்ளிகள்)**

**03. பின்வரும் தலைப்பில் 50 சொற்களுக்குக் குறைவுறாத வகையில் கடிதம் எழுதுக.**

நீர் சென்ற கல்விச் சுற்றுலா தொடர்பில் உமது நண்பனுக்கு ஓர் **கடிதம்**.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(20 புள்ளிகள்)**

பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம்

.............................................